
# M1

1. மாற்றுத்திறனாளிகள் உரிமை சட்டம் 2016–இல் எத்தனை குறைபாடுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன?
   a. 21 ✓
   b. 18
   C.11
2. RPwD என்பதன் விரிவாக்கம் என்ன?
   a. Rights of Persons with Disabilities ✓
   b. Right to Education
   c. Rights of Displaced Persons
3. பின்வரும் கூற்றுகளில் எது/எவை மாற்றுத்திறனாளிகள் உரிமை சட்டம் 2016– இன் கீழ் உள்ளது?
   a. பாகுபாடு இல்லாத மாணவர் சேர்க்கை
   b. மாணவர்களை சிறந்த முறையில் கல்வி மற்றும் சமூக வளர்ச்சியில் ஊக்கப்படுத்துதல்
   c. இரண்டு கூற்றுகளும் சரியானவை ✓
4. மாற்றுத்திறன் கொண்ட மாணவர்கள் மற்ற மாணவர்களுடன் இணைந்து கற்கும் கல்வி முறை
   a. சிறப்பு கல்வி
   b. தொழிற்கல்வி
   c. உள்ளடக்கிய கல்வி ஆகும். ✓
5. பின்வருவனவற்றில் சரியான கூற்றை/ கூற்றுகளை தேர்வு செய்யவும்.
   நீங்கள் ஜப்பானிய மொழியை இப்போதுதான் கற்கத்
   தொடங்குகிறீர்கள் என்று கற்பனை செய்துகொள்ளுங்கள். உங்களால் புரிந்து கொள்ள முடியும் ஆனால் படிக்க முடியாது. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஒரு செயல்பாட்டைக் கற்றுத் தர உங்கள் ஆசிரியர் என்ன செய்ய முடியும்?
   a. எழுத்தை பேச்சாக மாற்றித் தரும் செயலியைப் பயன்படுத்த அனுமதித்தல். ✓
   b. படிக்கவும் எழுதவும் ஒரு நண்பரை ஏற்பாடு செய்து தருதல்
   c. படிக்கத் தெரிந்த பின்பு உங்களை வரச் சொல்லுதல்
6. பின்வருவனவற்றில் சரியான கூற்றை/ கூற்றுகளை தேர்வு செய்யவும்.
   ஒரு மாற்றுத்திறன் கொண்ட குழந்தையின் கை முறிந்துள்ளதாக கற்பனை செய்து
   கொள்ளுங்கள். அம்மாணவரின் தேர்வுகளுக்கு ஆசிரியர் எவ்வாறு உதவலாம்?
   a. மாணவரைத் தேர்வு எழுதாது தோல்வி அடைய கேட்டுக்கொள்வார்.
   b. தேர்வை வாய்வழியாக எழுத அனுமதிப்பார்
   c. ஒரு துணை எழுத்தரை வழங்குவார். ✓

7. பின்வருவனவற்றில் கண்ணுக்குத் தெரியாத குறைபாடுகள் எவை?
    a. மூளைமுடக்குவாதம்
    b. பன்முகக் குறைபாடு
    c. தொழுநோய்
    d. அறிவுசார் குறைபாடு ✓
    e. புற உலக சிந்தனையில்லாமை ✓
    f. மன நோய் ✓
    g. கற்றல் குறைபாடு ✓
8. ஒரு மாற்றுத்திறன் கொண்ட குழந்தைக்கு கண் அறுவை சிகிச்சை செய்து, தற்போது அம்மாணவரால் பார்க்க இயலவில்லை என்று கற்பனை செய்து கொள்ளுங்கள், வகுப்பறையிலும் பள்ளியிலும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்வதற்கு ஆசிரியர் அம்மாணவருக்கு எவ்வாறு உதவுவார்?
    a. வழியைக் கண்டறியும் வகையில், தரையிலும் சுவரிலும் தொட்டு உணரக்கூடிய பொருட்களை அடையாளங்களாக வைத்தல் ✓
    b. அனைவரையும் நடைபாதையில் உள்ள பைகள் போன்றவற்றை அகற்றுமாறு கேட்டுக்கொள்ளுதல்
    c. கண் குணமாகும் வரை பள்ளிக்கு வரக்கூடாது என்று கூறுதல்.

**மாறுபட்ட குறைபாடு**

பிரபலமான நபர்களை அவர்களது மாற்றுத்திறன்களுடன் பொருத்தவும் (பதிலை கிளிக் செய்து நகர்த்தி அதற்கேற்ற படத்துடன் பொருத்தவும்)




www.Padasalai.Net

## Check

1. பின்வருவனவற்றில் நிற மாற்றத்துடன் திட்டுக்கள் காணப்படும் குறைபாடு எது?
   a. தொழுநோய் ✓
   b. குள்ளத்தன்மை
   C. அமில வீச்சு
2. பின்வரும் வாக்கியம் சரியா தவறா என கண்டுபிடிக்கவும்.
   தன்னிச்சையான கட்டுப்பாடற்ற இயக்கத்தைக் கொண்ட மாணவருக்கு கையெழுத்து மிக அழகாக இருக்கும்.
   True
   False ✓
3. உடல் இயக்கக் குறைபாடு என்றால் என்ன?
   a. மனித உள்ளுறுப்புகளின் இயக்க இயலாமையைக் குறிக்கிறது
   b. எலும்புகள், மூட்டுகள் மற்றும் தசைகளின் இயக்க இயலாமையைக் குறிக்கிறது ✓
   C. மனித வெளி உறுப்புகளின் இயக்க இயலாமையைக் குறிக்கிறது
4. ................என்பது தசை பலவீனத்தையும் ஒட்டுமொத்த தசை இழப்பையும் ஏற்படுத்தும் ஒரு கூட்டு நோயாகும்.
   a. குள்ளத்தன்மை
   b. தசைநார் சிதைவு ✓
   C. மூளை முடக்கு வாதம்
5. பின்வருவனவற்றில் எது உடல் இயக்கக் குறைபாட்டின் கீழ் வருகிறது?
   a. அறிவுசார் குறைபாடுகள்
   b.மூளை முடக்கு வாதம் ✓
   c. பார்வையின்மை

## M2

ஒரு ஆசிரியராக நீங்கள் அனைத்து வகையான குறைபாடுகளைப் பற்றி அறிந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா? இந்தத் தகவல் உங்களுக்கு எப்படி உதவும்?

www.Padasalai.Net

இங்கே எழுதவும்

| |
|---|
| ஆம். வகுப்பறையில் கற்றல் செயலுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். |

"குறைபாடு வெற்றிக்குத்
தடையாக இருக்க வேண்டியதில்லை" –ஸ்டீவன் ஹாக்கிங்
இந்தக் கூற்று உண்மை என்று நினைக்கிறீர்களா? உங்களுக்குத் தெரிந்த சில பிரபலமான மாற்றுத் திறன் கொண்டவர்களின் பெயர்களைக் குறிப்பிட முடியுமா?
இங்கே எழுதவும்

| |
|---|
| 1. Helen keler<br>2. Sudha Chandran |

1. ......................குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு சுற்றுப்புற ஒலிகளை முற்றிலுமாக கேட்க இயலாது
   a. பார்வையின்மை
   b. காது கேளாமை ✓
   C. குறைந்த பார்வை
2. புத்தகத்தை மிக அருகில் வைத்துப் படிப்பது என்பது எந்த குறைப்பாட்டுக்கான அறிகுறி?
   a. காது கேளாமை
   b. பார்வையின்மை
   C. குறைந்த பார்வை ✓
3. செவித்திறன் குறைபாடு– வகைப்படும்
   a. 4
   b. 1
   C. 2 ✓
4. பேச்சு மற்றும் மொழித்திறன் குறைபாடு உள்ள குழந்தைகள்.
   a. சிறிய எழுத்துக்களை படிக்க x முடியாது பிறர் உதவியை நாடுவர்
   b. பேச்சின் ஒலிகளைப் பின்பற்றுவதில் சிரமப்படுவர் ✓
   C. உரையாடலின் போது முகம் அல்லது உதடுகளைப் பார்ப்பர்

1. பின்வரும் வாக்கியம் சரியா தவறா என கண்டுபிடிக்கவும்.
   கணிதத்தில் குறிப்பிட்ட கற்றல் குறைபாடு உள்ளவருக்கு திசை, தூரம் மற்றும் நேரம் ஆகியவற்றைப் புரிந்து கொள்வதிலும் மற்றும் மதிப்பிடுவதிலும் சிரமம் காணப்படும்.

True √

False

2. எழுத்துக்களின் வரிசையைத் தலைகீழாக மாற்றிப் படித்தல் என்பது எந்த வகை குறைபாடு. Eg "Saw" – "Was"

a. கணிதத்தில் குறிப்பிட்ட கற்றல் குறைபாடு

b. வாசிப்பில் குறிப்பிட்ட கற்றல் குறைபாடு √

c. எழுத்தில் குறிப்பிட்ட கற்றல் குறைபாடு

3. புற உலக சிந்தனை இல்லாமையின் அறிகுறிகள்

a. எழுத்துக்களின் வரிசையைத் தலைகீழாக மாற்றிப்படித்தல்

b. நடக்கும் போது நிலைதடுமாறி கீழே விழுதல்

c. கண்களைப் பார்த்து பேசுவதைத் தவிர்த்தல் √

4. அறிவுசார் குறைபாடு உள்ள குழந்தைகள் ................

a. ஏற மற்றும் இறங்க சிரமப்படுவர்

b. கை, தசை வலி மற்றும் வீக்கம் காணப்படும்

c. கற்பதிலும், கற்றதைநினைவில்வைப்பதிலும் சிரமப்படுவர் √

5. .................. என்பது மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள் சமூகத்தோடு தகவல் தொடர்பு கொள்வதற்கும் பேசுவதற்கும் சிரமப்படும் ஒரு நிலை ஆகும்

a. மூளை முடக்கு வாதம்

b. திசு பன்முகக் கடினமாதல்

c. புற உலக சிந்தனை இல்லாமை √

1. நாள்பட்ட நரம்பியல் குறைபாடுகள் எத்தனை வகைப்படும்?

a. 3

b. 1

C. 2 √

2. ................ ஒரு பரம்பரை இரத்த சிவப்பணுக் குறைபாடு ஆகும்.

a. திசு பன்முகக் கடினமாதல்

b. அரிவாள் செல்சோகை √

c. தசை நார் சிதைவு

3. ........... என்பது மூளைக்கும் உடலுக்கும் இடையிலான தகவல் ஓட்டத்தை சீர்குலைக்கும் மத்திய நரம்பு மண்டலத்தின் ஒரு நோயாகும்.

a. பன்முகக் குறைபாடு

b. திசு பன்முகக் கடினமாதல் √

c. குள்ளத்தன்மை

4. இரத்தம் சார்ந்த குறைபாடுகள் எத்தனை வகைப்படும்?

a. 4

b. 3√

C. 2

5. பின்வரும் வாக்கியம் சரியா தவறா என கண்டுபிடிக்கவும்.

உடல் சோர்வின் காரணமாக குழந்தைகள் அன்றாட நடவடிக்கைகள் மற்றும் பள்ளி செயல்பாடுகளில் தங்களின் முழு பங்கேற்பை அளிக்க இயல்கிறது.

True

False √

1. இல்லாத பொருட்களைக் குறித்து கற்பனை செய்தலும் அல்லது குரல்களைக் கேட்பதும் ............ ஆகும்.

a. மனநோய் √

b. மூளை முடக்குவாதம்

C.அறிவுசார் குறைபாடு

2. மனநோய் என்பது .................

a. காது வலி மற்றும் காதிலிருந்து அசுத்தம் வெளியேறுவதைக் குறிக்கும்.

b. உணர்வுப் பூர்வமான பதில்கள் மற்றும் சமூக திறன்கள் பாதிப்பதைக் குறிக்கும் √

c. உடல் சார்ந்த குறைபாட்டைக் குறிக்கும்

3. பன்முகக் குறைபாடு என்பது

a. ஒரு குறைபாட்டுடன் இருப்பது

b. எந்த ஒரு குறைபாடும் இல்லாமல் இருப்பது

c. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குறைபாடுகளுடன் இருப்பது √

www.Padasalai.Net